இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 05.08.2026


# கர்நாடகாவிடம் இருந்து கற்றுக் கொள்!

“காவிரிப் பிரச்சினை தொடர்பாக அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டுவதால் எந்தப் பயனும் இல்லை” என்று அமைச்சர் நிர்மல்குமார் கண்டுபிடித்திருக்கிறார். கத்துக்குட்டிகளும் தற்குறிகளும் அமைச்சர் ஆனால் ஒரு பிரச்சினை எப்படி சிக்கலுக்குள் சிக்கிக் கொள்ளும் என்பதற்கு உதாரணம்தான் நிர்மல்குமாரின் பேட்டி ஆகும்.

**காவிரிப் பிரச்சினை என்றால் என்னவென்றே தெரியாமல் நிர்மல்குமார் நித்தமும் உளறிக் கொண்டு இருக்கிறார். கர்நாடகா விடம் காவிரி உரிமையை நிலைநாட்டும் முதுகெலும்பு இன்றைய விஜய் அரசுக்கு இருக்கிறதா என்றால் இல்லை. அவர்களது கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் கட்சிதானே கர்நாடகாவை ஆள்கிறது. ராகுல் காந்தியை வைத்து பேச வேண்டியது தானே? இங்கே தண்டத்துக்கு இரண்டு பேருக்கு அமைச்சர் பதவி கொடுத்து வைத்துள்ளீர்களே! அவர்களை கர்நாடக அரசிடம் பேச வைக்க வேண்டியது தானே?**

கர்நாடகாவிடம் உரிமையை நிலைநாட்ட முடியவில்லை என்றால் பிரச்சினையை ஒன்றிய அரசின் முன்னால் வைத்து பஞ்சாயத்து செய்யச் சொல்லும் துணிச்சலாவது இருக்கிறதா என்றால் அதுவும் விஜய் அரசுக்கு இல்லை. டெல்லி என்றாலே கிலி பிடிக்கிறது. ஒரு பக்கம் கரூரில் 41 பேரைக் கொலை செய்த வழக்கை சி.பி.ஐ. வைத்துள்ளது. இன்னொரு பக்கம் வருமானவரி வழக்குகள், கார் இறக்குமதி வழக்குகள். அதனால் பா.ஜ.க.வையும் பகைத்துக் கொள்ள முடியாது.

**வழக்கம் போல படம் காட்ட நினைத்தார் விஜய். கர்நாடகாவுக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்துவதாக நாடகம் நடத்தி, அணைக்கட்டுகளைப் பார்வையிடுவதைப் போல ரீல்ஸ் எடுக்கத் திட்டமிட்டார். இந்தக் கோமாளித்தனம் நடக்கப் போவதை முதலிலேயே தெரிந்து கொண்டு எச்சரிக்கை மணி ஒலித்தார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ‘கர்நாடகம் செல்வதால் எந்தப் பயனும் இல்லை’ என்று உழவர் பெருமக்களும் ஒப்புக் கொண்டு எதிர்ப்பு தெரிவித்தார்கள். ‘திருடனுக்குத் தேள் கொட்டியதைப் போல’ மாட்டிக் கொண்ட த.வெ.க. அரசு, இப்போது மழுப்புகிறது.**

‘தற்போதைய நிலையில் முதலமைச்சர் விஜய், கர்நாடகம் செல்வதற்கான திட்டம் ஏதுமில்லை’ என்று சொல்கிறார் நிர்மல்குமார். இதில் உண்மை என்ன என்பதை கர்நாடக முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் அம்பலப்படுத்தி விட்டார். ‘கர்நாடகம் வர இருப்பதாக தமிழ்நாட்டில் இருந்து தான் முதல் தகவல் வந்தது’ என்று சொல்லி இருக்கிறார் கர்நாடக முதலமைச்சர். இதன் மூலமாக விஜய் ஆட்சி சொல்வது பொய் எனத் தெரிந்துவிட்டது.

**காவிரிப் பிரச்சினை ஒரு கட்சியின் பிரச்சினை அல்ல. அது தமிழ்நாட்டின் பிரச்சினை. எனவே ஒட்டுமொத்த தமிழ்நாடே ஓரணியில் நின்று குரல் கொடுக்க வேண்டும். மாறாக, தி.மு.க.வை விமர்சிப்பதை மட்டுமே த.வெ.க. அமைச்சர் நிர்மல்குமார் செய்து வருகிறார். அவருக்கு காவிரி பிரச்சினை என்றால் என்ன என்றே தெரியவில்லை. பிரதமர் வி.பி.சிங் அமைத்த காவிரி நடுவர் மன்றமும் தெரியவில்லை. பிரதமர் வாஜ்பாய் அமைத்த காவிரி கண்காணிப்பு ஆணையமும் தெரியவில்லை. இந்த இரண்டையும் இரண்டு பிரதமர்கள் மூலமாகச் செய்ய வைத்தவர் அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள். 1990 முதல் காவிரியில் தண்ணீர் வர நடுவர் மன்றமும் கண்காணிப்பு ஆணையமும் தான் காரணம். ஆனால், ‘பிரச்சினையே கலைஞரால்தான்’ என்று கம்பி கட்டுகிறார் நிர்மல்குமார். தனது ஆட்சி என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் வழக்கம் போல திசை திருப்பவே த.வெ.க. அரசு திட்டமிட்டு செயல்படுகிறது. இந்தச் சண்டையை ரசிக்கிறது கர்நாடகம்.**

கர்நாடக அரசும் அரசியல் தலைவர்களும் தங்கள் மாநிலத்தின் நிலைப்பாட்டை ஓரணியாக நின்று காட்டுகிறார்கள். அங்கு காங்கிரஸும் ஒன்றுதான். பா.ஜ.க.வும் ஒன்றுதான். அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக இருந்து ஒற்றுமையை நிலைநாட்டுகிறார்கள்.

**கர்நாடக மாநில எம்.பி.க்கள் கூட்டம் டெல்லியில் நடக்கிறது. அனைத்துக் கட்சி எம்.பி.க்களும் வந்து விட்டார்கள். மாநிலத்தை ஆளும் காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சரும் இருக்கிறார். ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அமைச்சர்களும் அங்கு உட்கார்ந்து உள்ளார்கள். நேற்று கூட பெங்களூரில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடந்து, அதில் ஒன்று விடாமல் எல்லா கட்சிப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு ஒருமித்த கருத்தினை வெளிப்படுத்தி உள்ளனர். இதைப் பார்த்தாவது கற்றுக் கொள்ள வேண்டாமா த.வெ.க. அரசு?**

**தமிழ்நாட்டின் ஒற்றுமையைக் கெடுத்த நிர்மல்குமார், ‘கர்நாடக முதலமைச்சரே தி.மு.க. பேச்சைத்தான் கேட்பார்’ என்று சொல்வது எல்லாம் ஆணவத்தின் உச்சம். தான் சொல்லும் சொல்லுக்கு என்ன பொருள் என்றே தெரியாதவர் தான் இப்படி எல்லாம் பேசுவார்? வாய்க்கு வந்ததை உளறுவது என்று இதற்குப் பெயர். இதை ராகுல்காந்திக்கு கடிதமாக எழுதுவாரா விஜய்? காவிரிப் பிரச்சினையை இதை விட மோசமாக யாரும் கையாள முடியாது. இந்த மாதிரியான உளறுவாய்களிடம் ஆட்சி சிக்கி இருப்பதுதான் வேதனையிலும் வேதனை ஆகும்.**



தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா அவர்களின் மகள் வழிப் பேத்தி ஹாஜிமா எம்.சமீனா சப்ரியத் – எஸ்.ஹனீஃப்கான் அவர்களின் திருமணம் கடந்த 05.07.2026 அன்று தி.மு.கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதனையொட்டி நேற்று முன்தினம் (03.08.2026) கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை மணமக்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### ‘ஜன் சுராஜ்’ கட்சியின் நிறுவனர்

## பிரசாந்த் கிஷோர் பீகார் இடைத்தேர்தலில் வெற்றி!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, ஆக. 5 –

பீகார் இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற ‘ஜன் சுராஜ்’ கட்சியின் நிறுவனர் பிரசாந்த் கிஷோரைப் பாராட்டி நேற்று முன்தினம் (03–07–2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு :–

**பங்கிபூர் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் சிறப்பான வெற்றி பெற்று, ஜன் சுராஜ் கட்சியின் முதல் தேர்தல் வெற்றியைப் பதிவு செய்துள்ள அக்கட்சியின் நிறுவனர் பிரசாந்த் கிஷோர் அவர்களுக்குப் பாராட்டுகள்.**

**பங்கிபூர் தொகுதி மக்களுக்கும் பிகார் மாநிலத்துக்கும் தொண்டாற்றுவதில் வெற்றியடைய அவருக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்தைத் தெரிவித்துள்ளார்.



### விளாத்திகுளம் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர்

## ஜி.வி.மார்க்கண்டேயனுக்கு ஜாமீன்!

### சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஆக. 5 -

முதல்வர் விஜய்க்கு மிரட்டல் விடுத்ததாக கைது செய்யப்பட்ட விளாத்திகுளம் தி.மு.க. எம்.எல்.ஏ. மார்க்கண்டேயனுக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



தமிழ்நாடு முதல்வர் விஜய்க்கு மிரட்டல் விடுத்ததாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கில் விளாத் திகுளம் தி.மு.க. எம்.எல்.ஏ. ஜீ.வி.மார்க்கண்டேயனை, தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் ஜூலை 20 ஆம் தேதி கைது செய்தனர். தன்னை சிறையிலடைத்து தூத்துக்குடி நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து மார்க்கண்டேயன் தாக்கல் செய்த மனுவை தூத்துக்குடி முதன்மை அமர்வு நீதிமன்றம், தள்ளுபடி செய்தது.

இதைய டுத்து. ஜாமீன் கோரி மார்க்கண்டேயன் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தமனு நீதிபதி ஜி.கே. இளந்திரையன் முன் விசாரணைக்கு வந்த போது, மார்க்கண்டேயன் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பி.வில்சன். இதுபோல பேசியிருக்க கூடாது எனக் கூறி தூத்துக்குடி நீதிமன்றம் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதையடுத்து மார்க்கண்டேயனுக்கு ஜாமீன் வழங்கிய நீதிபதி. ‘இது போல் இனிமேல் பேசப் போவதில்லை என தூத்துக்குடி ‘நீதிமன்றத்தில் உத்தரவாதம் அளிக்க வேண்டும். சட்டமன்ற கூட்டத்தொடர் நடக்கும் நாட்கள் தவிர மற்ற நாட்களில் இரண்டு வாரங்களுக்கு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும்’ என நிபந்தனை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

### ஈரோடு உள்ளிட்ட தொழில் மாவட்டங்களுக்கான சமமான

## பெரு நிறுவன சமூக பொறுப்பு நிதி ஒதுக்கீட்டில் பொறுப்பேற்க ஒன்றிய அரசு மறுப்பு!

### மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக. 5 -

தொழில் மாவட்டங்களுக்கான சமமான CSR (பெரு நிறுவன சமூக பொறுப்பு) நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசு பொறுப்பேற்க மறுப்பு; ஈரோடு போன்ற மாவட்டங்களின் நியாயமான கோரிக்கைக்கு பதில் இல்லை என ஈரோடு கே.இ.பிரகாஷ் மக்களவையில் குறிப்பிட்டார்.

ஈரோடு மக்களவை உறுப்பினர் கே. இ. பிரகாஷ் அவர்கள், நிறுவனங்கள் சட்டம், 2013-ன் கீழ் அமல்படுத்தப்படும் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு (CSR) விதிகள் தொடர்பாக, மாநிலங்கள் மற்றும் தொழில் வளர்ச்சி பெற்ற பகுதிகளுக்கிடையே CSR நிதி சமமாகப் பகிரப்படுகிறதா என்பதையும், குறிப்பாக தமிழ்நாட்டின் ஈரோடு போன்ற இரண்டாம் நிலை தொழில் மையங்களுக்கு வழங்கப்படும் CSR நிதி குறித்து ஒன்றிய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா என்பதையும் விளக்கம் கோரினார்.

மேலும், நிறுவனங்கள் சட்ட (திருத்த) மசோதா, 2026 தொடர்பாக தொழில் அமைப்புகள், சமூக அமைப்புகள் மற்றும் பிற பங்குதாரர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகள் என்ன, தற்போதைய நிறுவன ஆளுமைச் சட்ட அமைப்பின் கீழ் CSR செயல்பாட்டை மேலும் வலுப்படுத்தவும், வெளிப்படைத்தன்மை மற்றும் கண்காணிப்பு நடைமுறைகளை மேம்படுத்தவும் ஒன்றிய திட்டமிட்டுள்ளதா என்பதையும் கேட்டறிந்தார்.

அரசு நிறுவன விவகாரங்கள் அமைச்சகம் அளித்த பதில் பின் வருமாறு:-

(அ): இல்லை. நிறுவனங்கள் சட்டம், 2013-ன் கீழ் செயல்படும் CSR அமைப்பு முழுமையாக வெளிப்படுத்தல் (Disclosure) அடிப்படையிலானது என்றும், CSR நடைமுறைப்படுத்த வேண்டிய நிறுவனங்கள் தங்களது CSR நடவடிக்கைகளின் விவரங்களை ஆண்டுதோறும் MCA21 பதிவேட்டில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

CSR என்பது நிறுவனத்தின் இயக்குநர் குழு (Board) வழிநடத்தும் செயல்முறையாகும். நிறுவனத்தின் CSR குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், நிறுவனங்கள் சட்டத்தின் அட்டவணை VII-ல் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் துறைகளில் CSR நடவடிக்கைகளைத் திட்டமிடுதல், முடிவு செய்தல், செயல்படுத்தல் மற்றும் கண்காணித்தல் ஆகிய அதிகாரங்கள் இயக்குநர் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளன.



நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 135(5)-இன் முதல் விதிவிலக்கின்படி, நிறுவனங்கள் தாங்கள் செயல்படும் உள்ளூர் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், அது கட்டாய விதியாக அல்ல; வழிகாட்டும் தன்மை கொண்டதாக மட்டுமே இருப்பதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், உள்ளூர் பகுதிகளுக்கான முன்னுரிமையையும் தேசிய முன்னுரிமைகளையும் நிறுவனங்கள் சமநிலைப் படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளது.

எனவே, குறிப்பிட்ட பகுதி அல்லது குறிப்பிட்ட செயல்பாட்டிற்காக CSR நிதியை செலவிடுமாறு நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசு எந்தவித உத்தரவும் வழங்குவதில்லை. இதன் காரணமாக, ஈரோடு போன்ற மாவட்டங்களில் CSR நிதி பகிர்வு குறித்து தனிப்பட்ட ஆய்வு எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(ஆ): நிறுவனங்கள் சட்ட (திருத்த) மசோதா, 2026 நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு கூட்டு நாடாளுமன்றக் குழுவிற்கு (Joint Parliamentary Committee JPC) அனுப்பப்பட்டுள்ளது. இந்த மசோதா தொடர்பாக பல்வேறு பங்குதாரர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள கருத்துகள் மற்றும் பிரதிநிதித்துவங்கள் தற்போது அந்தக் குழுவின் பரிசீலனையில் உள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(இ): தற்போதைய CSR சட்ட அமைப்பிலேயே வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்ய போதுமான சட்ட ஏற்பாடுகள் உள்ளன என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

CSR நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் ஆண்டுதோறும் MCA21 பதிவேட்டில் CSR நடவடிக்கைகளின் விவரங்களை தாக்கல் செய்ய வேண்டும்.

மேலும், நிறுவனத்தின் CSR கொள்கையை இயக்குநர் குழு அறிக்கையில் வெளியிட வேண்டும். ஒப்புதல் அளிக்கப்பட்ட CSR நிதி குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்காக முழுமையாக செலவிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்வதும் இயக்குநர் குழுவின் பொறுப்பாகும்.

மேலும், CSR குழு அமைத்தல், CSR கொள்கை உருவாக்குதல், ஆண்டு செயல் திட்டம் தயாரித்தல், திட்டங்கள் மற்றும் செயல்படுத்தும் பகுதிகளைத் தேர்வு செய்தல், CSR செலவினங்களை தலைமை நிதி அதிகாரி (CFO) சான்றளித்தல் மற்றும் சட்டப்பூர்வ தணிக்கையர்களால் (Statutory Auditors) தணிக்கை செய்தல் போன்ற தற்போதைய சட்ட ஏற்பாடுகள் போதுமான கண்காணிப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்கின்றன என்றும், இதற்கும் மேலாக புதிய கண்காணிப்பு அல்லது வெளிப்படைத்தன்மை நடைமுறைகளை கொண்டு வருவதற்கான எந்தவொரு புதிய முன்மொழிவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.